RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# காலந்தோறும் பெண் - இராஜம் கிருஷ்ணன் கல்வி -வாழ்க்கை விபத்து

**லோ. விண்ணரசி** [அ] *

[அ] தமிழ்த்துறை, முதுகலை தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை,செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை - 600 032,

# A Woman Through Time – Rajam Krishnan's Academic Life Accident

**L. Vinnarasi** [a, *]

[a] Department of Tamil, PG Tamil and Research Department, Chellammal Women's College, Guindy, Chennai – 32

*Corresponding Author:
vinnarasiloganathan@gamil.com

Received: 13-12-2025
Revised: 18-02-2026
Accepted: 10-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

Under the title "Throught the Ages….. Woman," the section on life's accidents aims to examine a socio – histrorical context, focusing on one gender that constistutes half of the human society in the present era, as an alternative to the atrocities of child marriage, reforms such as education and economic independence for the idea of achieving a great discovery or accomplishment in the garden of knowledge. If a life dependent on a man. A life of subservience and self-effacement under the guise of traditional marital symbols, faces disruption, wouldn't it be a great relief to be able to earn a living through education, instead of being consumed by fire or being subjected to mutilation and continement amidst disfigurement? Women are progressing on par with men.if you ask . "why haven't you enrolled your daughter in calleg?". The answer used to "No, we are planning to get her married" now a days. Nobody says that anymore, because women, just like men. Have to pursue higher education even for the sake of getting married. In this context, the government has opened a consider able numbers of separate government high schools, higher secondary schools, and college for women to promote female education. Currently, the Tamil Nadu government is implementing many excellent schemes for women and for female education thereby improving the quality of life for women. If is said that in India. Women are given a special respect in theory. But there is a vast difference between reality and what is said. Globally women constitule 1/2 of the population, hold 2/3 of the jobs. But receive of the Income and own 1/10 of the assets. Althrough many countries have created a state of education for women the reason why they are less in the society even today is because of the difference between men and women, the economic status of society, the status of women's slavery to women in the sangam period women were granted full rights to education. The respect accorded to women during that era is clearly evident from those belonging to royal families to the poets who composed and recited verses, held a very high status. The importance of female education is crucial for social progress women today are involved in most fields. The educational qualification of women are constantly improving However education and wisdom, combined with the arts of dance and music. Were not considered incompatible with a women's norm family life. They were not relegated to a separate class of 'coutesans' and reserved exclusively for them. All of this became meaning less when at the age of seven. Her intellectual vision was blinded by flowers, gold, and silk, and she was bound in the shackles of marriage.

**Keywords:** Societies, Woman, Family Life, Marriage, Education

## முன்னுரை

'காலந்தோறும் பெண்' என்ற தலைப்பில் உள்ள கல்வி - வாழ்க்கை விபத்து என்ற பகுதியில் மக்கள் சமுதாயத்தில் சரிபாதியாக விளங்கும் ஒருபாலரை மையமாக்கி, ஒரு சமுதாய வரலாற்றுப் பிண்னணியை ஆராய வேண்டும் என்பதுதான் நோக்கமாக உள்ளது.

## பெண்கல்வி

"இன்றைய காலகட்டத்தில் குழந்தை மணக் கொடுமைகளுக்கு மாற்றாக, பெண்ணுக்குக் கல்வி, பொருளாதாரம் சார்ந்த சுய வாழ்வு என்ற சீர்திருத்தங்கள் வந்தன. பெண் கல்வி என்பது, வாழ்க்கையில் விபத்து நேர்ந்தால் மட்டுமே அநுமதிக்கக் கூடியதாக இருந்தது. கல்வி, அவள் அறிவு மலர்ச்சிக்கு வாய்ப்பளித்து வாழ்க்கையின் பலனாகப் பல சமுதாயச் சிக்கல்களை ஓர்ந்து முழுமை காண வேண்டும் என்றோ. அறிவின் தோட்டத்தில் ஒரு பெரிய கண்டுபிடிப்பையோ, சாதனையையோ நிகழ்த்த வேண்டும் என்றோ எந்தக் கருத்துக்கும் இடமில்லை ஓர் ஆணைச் சார்ந்து வாழும் வாழ்க்கைக்கு, அண்டி, ஊழியம் செய்து, மஞ்சட்குங்குமப் போர்வையில் தன்னைக் கரைக்கும் வாழ்க்கைக்கு ஊறுவந்தால், நெருப்பில் எரியாமல், முண்டித அலங்கோலங்களில் குத்தப்பட்டு முடக்கப்படாமல், கல்வி கற்று, வயிற்றைக் கழுவிக் கொள்ளலாம் என்பது அந்த வகையில் மிகப் பெரிய ஆறுதல்கள் அன்றோ?" (காலந்தோறும் பெண் கல்வி-வாழ்க்கை விபத்து, இராஜம் கிருஷ்ணன், ப.49)

இந்நாட்களில் பொருளாதாரத் தேவையை முன்னிட்டு பெண் எவ்வகையிலேனும் பொருளீட்டும் தகுதியையும் பெற வேண்டும் என்ற குறிக்கோளில் தான் பொதுவாகவே பெண்கல்வி பரவலாக்கப்பட்டு வருகிறது.

## ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள்

"கல்லூரியில் பெண்ணைச் சேர்க்கவில்லையா" என்று கேட்டால், "இல்லை, கல்யாணம் செய்துக் கொடுக்கப்போவதாக இருக்கிறோம்" என்ற விடை வரும். இப்போதெல்லாம் யாரும் அப்படி சொல்வதில்லை. ஏனென்றால், ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள் கல்யாணமாவதற்கென்றே உயர்கல்விக்கு அலையவேண்டி இருக்கிறது. "பெண் வங்கியில் வேலை செய்கிறாய்..... அதனால் பல வசதிகள் உண்டு" என்ற அவள் மதிப்பு, வெளிப்படையாக அந்த வேலைத் தகுதியில் மட்டுமே ஒட்டி அவளை ஒன்றுமில்லாமல் ஆக்கிவிடுகிறது.

"முந்நாட்களில் உலகெங்கினும் நிலவிய அடிமைச் சந்தை முறை தமிழ்நாட்டிலும் இருந்ததற்குச் சான்றாக, பல கல்வெட்டுக்களும் சான்றுகளும் கிடைத்திருக்கின்றன. "கொள்வாருளரோ, கொள்வாருளரோ என்று அடிமையின் பெயரையும், தகுதியையும் பகிரங்கமாகக் கூறி வாங்குபவர்களை அழைப்பார்களாம். இந்த முறை அடிமைச் சந்தையில் பெண் அடிமைகள் தாம் அதிகமாக விற்பனைக்கு உரியவர்களாக வருவது வழக்கமாக இருந்ததாகவும், தெரிய வருகிறது.

கொள்வோம்! கொள்வோம் என்று வாங்குபவர் கூவிக் கொண்டு அறிவிக்க, விலை நிர்ணயம் செய்யும் நல்லவர் குறுக்கிட்டு வாணிபப் பேரத்தை முடித்தார்கள் என்று தெரியவருகிறது. ஆனால் இந்நாட்களில் இந்த வாணிபம் மேல் என்ற வகையில் பெண்ணைக் கொள்வாருக்கு மேலும் பொருள் கொடுக்கும் முறை உயர்ந்து போயிருக்கிறது. அத்துடன் பெண்ணின் பொருளாதாரம் சார்ந்த கல்வித் தகுதி உயர உயர, அதே வகையிலும் மேலும் ஏற்றம் பெற்ற ஆளே இவளை அடிமை கொள்ள முடியும் என்ற நிலையில், மேலும் மதிப்பிழந்து போகிறாள் பெண்." (மேலது பக்கம்.50)

## பெண்கல்விக்கு ஊக்கம்

பெண்கல்வியை ஊக்குவிக்க பெண்களுக்காக தனியே அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேனிலைப் பள்ளிகள், கலைக்கல்லூரிகள் ஆகியவை கணிசமான எண்ணிக்கையில் திறக்கப்பட்டுள்ளன. மகளிர் கல்லூரி இல்லாத இடங்களில் உள்ள ஆடவர் கல்லூரிகளில், பெண்களை 30% அளவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அரசாணை தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டுள்ளது. பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு வரை பெண் ஆசிரியர்களையே நியமிக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேனிலைப்பள்ளிகளில் 11 மற்றும் 12-ம் வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவிகளுக்கும் இலவச சைக்கிள் வழங்கும் திட்டமும் 11-ம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டமும் அமல் செய்யப்பட்டுள்ளது. பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு ரூ.25000/-ம் பட்டம் அல்லது பட்டயப் படிப்பில் தேர்ச்சி பெற்ற ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/-ம், அரசு அன்பளிப்பாகத் தருகிறது. மகளிருர்கென தனியாக ஒரு பல்கலைக்கழகம், கொடைக்கானலில் "அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்" என்ற பெயரில் இயங்கி வருகிறது. தற்போது பெண்களுக்காக, பெண்கல்விக்காக

தமிழ்நாடு அரசு பல சிறந்த திட்டங்களை செயல்படுத்தி பெண்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துகிறது.

## பெண்களின் அந்தஸ்து

பேச்சளவில் இந்தியாவில் பெண்களுக்கு என்று ஒரு தனி மரியாதை உண்டு என்கிறனர். ஆனால் உண்மைக்கும், சொல் அளவிற்கும் மிகுந்த வேறுபாடு உள்ளது. ஒவ்வொரு நிலையிலும் பெண் வேறுபடுத்தப்படுகின்றாள். வறுமையும், கல்வி அறிவின்மையுமே இதற்குக் காரணம் எனலாம். நடுத்தர வர்க்கப் பெண்களில் சிலர் வசதியுடன் காணப்படக் காரணம். கல்வி அவர்களுக்கு எட்டும் தூரத்தில் உள்ளதேயாகும். அவர்கள் கல்விபெற நகர்ப்புறத்திற்குச் செல்கின்றனர்.

சமுதாய மாற்றத்தையும் ஓரளவு ஏற்றுக் கொண்டுள்ளனர் இருந்தாலும், இன்னும் பெண்களுக்குச் சமுதாயம் நிறைய செய்ய வேண்டியுள்ளது.

“உலக அளவில் பெண்கள் .½ பங்கு பெண்கள் உள்ளனர். 2/3 பங்கு வேலையில் உள்ளனர். 1/10 பங்கு வருமானம் பெறுகின்றனர். 1/10 பங்கு சொத்துக்களை உரிமையாக்கி உள்ளனர்.” (மகளிர் மேம்பாடு, K.கல்யாணசுந்தரி, ஜெயபூபதி, R.தெய்வானை, ப.14)

## கல்வி வழி பெண்களின் தகுதிப்பாடு

கடந்த 30 ஆண்களை எடுத்துக்கொண்டால் பெண் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டு, அவர்கள் மேம்பாடு அடைய, உயர்ந்த அளவில் சமுதாயத்தில் வளர்ச்சி அடைய அவர்களின் பங்கு அறியப்பட்டு, உலக அளவில் மாற்றங்கள் வந்துவிட்டன. இன்று மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அடிப்படைக் கல்விக்கு என்று செலவுச் செய்யப்படுகிறது. தேசிய, சர்வதேச அளவில், பெண் கல்வி மேம்பாட்டிற்காக முயற்சிகள் எடுத்து வரப்பட்டுள்ளன. இருந்தாலும், பெண் கல்வி பெறும் வெற்றியில் பெரிய இடைவெளி இருந்து கொண்டு தான் உள்ளது.

நம் சமுதாயக் கட்டமைப்பில் பெண் என்பவள் குறைந்த வாய்ப்புக்களையும், சலுகைகளையும் பெறுவதைக் காணலாம். பெண்களுக்குப் பொதுவாக பள்ளிச் செல்ல உரிமை இல்லாமை, சொத்துரிமை பெறாமை, திருமணம் பற்றித் தாங்களே முடிவு எடுக்க முடியாமை ஆகிய நிலைகள் உள்ளன.

பெண்கள் தம் தனித்தன்மையை வளர்க்கும் பொருட்டு உயர்க்கல்விக்காக வெளிவருவதில்லை. இதனால் பெண்கள் ஒரு வேலையைத் தேர்ந்தெடுத்தல் (வருமான உயர்வுள்ள வாய்ப்புகள் ஏராளம்) மற்றும் அரசியலில் தலைமைப் பண்புகளை முன்வந்து ஏற்றல் ஆகியன இயலாத நிலை உள்ளது.

“பல நாடுகள், பெண்கல்வி பெறும் நிலையை உருவாக்கிக் கொடுத்திருந்தாலும், இன்றும் அவர்கள் சமுதாயத்தில் குறைவாக இருப்பதற்கு காரணம் ஆண், பெண் என்ற வேறுபாடு மதிப்பு, நாகரிகப் பண்பாடு, சமுதாயத்தின் பொருளாதார நிலை ஆணுக்குப் பெண் அடிமை என்ற நிலை என்றாலே அவளுடைய குணாதியசங்கள் இதுதான் என்று வைத்துள்ள நிலை ஆகியனவாகும். எனவே, பெண்கல்வி மற்றும் பயிற்சி வழியே பெண்களை முழுமையான வளர்ச்சியடையச் செய்தல் முடியும்.” (மேலது பக்கம்.19)

## வேத காலத்தில் பெண்களுக்குக் கல்வி பயிற்று முறை

வேத காலத்தில் பெண்ணுக்குக் கல்வி பயிற்றப்பட்டது. அது எத்தகைய கல்வி? உபநயனம் என்ற சடங்குடன் அந்நாளையக் கல்விப் பயிற்சி-அறிவைத் தேடும் பருவம் ஆரம்பமாகிறது. உபநயனம் என்ற சொல்லுக்கு, இன்னொரு கண்ணைக் கொடுத்தல் என்ற பொருளையும், அறிவினால் மேலும், மேலும் கூர்ந்து காணும் நோக்கில் அழைத்துச் செல்லல் என்ற பொருளையும் கூறுகிறார்கள். ஒரு குருவை நாடி, மாணவ-மாணவியர் தமக்கு அறிவொளியைத் தந்து வாழ்வாங்கு வாழக்கூடிய எல்லா நலன்களையும் அளிக்கும் கல்வியைப் பயிற்றியருள வேண்டும்.

“வேத கால ஆரியர் இந்தியாவில் வந்து ஊன்றிய காலங்களில் கானக விலங்குகளுடன் மட்டுமின்றி, பல்வேறு இனத்தாருடனும் தங்களுக்குள்ளேயே-குழுக்களுடனும் போராட வேண்டி இருந்தது. இதன் காரணமாகப் பெண்கள் மொழியும் இலக்கியமும் மட்டுமின்றி, போரிடும் கலையையும் பயின்றார்கள்.” (மேலது பக்கம்.21)

பெண் கல்வியும், சமுதாய வளர்ச்சியும்

“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு

மாடல்ல மற்ற யாவை”

என்ற குறளுக்கேற்ப, பெண்களும், ஆண்களும் இன்று கல்வியின் முக்கியத்துவம் பற்றி நன்கு அறிந்துள்ளனர். குறிப்பாக இதில் பெண்கல்வியின் நிலை பற்றி அறிந்து கொள்வது அவசியமாகிறது.

## சங்க காலப் பெண்கள் நிலை

சங்க காலப் பெண்களுக்குக் கல்வியில் முழுஉரிமை வழங்கப்பட்டது. அக்காலத்திலேயே ஔவையார், காக்கைப் பாடினியார், பொன்முடியார், பெருங்கோப்பெண்டு முதலானோர் பெண்கல்வியில் சிறந்து விளங்கினர்.

“பெண்கள் அந்த காலத்தில் இலக்கியங்களை ஆராய்ந்தால் பெண்கள் மதிக்கப் பெற்றிருந்த நிலை தெளிவாகத் தெரிகிறது. மன்னர் குடும்பத்தைச் சார்ந்த பெண்கள் முதல் பாடி நடந்த புலவர்கள் வரை மிக உயர்வான நிலையைப் பெற்றிருந்தனர். இவர்கள் தவிர சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் தங்கள் அறிவாற்றலால் நாட்டுக் காவல், தினைப்புனக்காவல், தொழிற்காவல், பொருளியல் காவல், வீட்டுக்காவல் முதலில் தொழில்களைத் திறம்பட நடத்தியுள்ளார். இவர்களுள் நாட்டை முன்வைத்துத் தங்கள் வாழ்க்கையை நடத்திய பெண்கள் என்றும் சிந்தனைக்குரியவர்களாகின்றார்கள்.” (பெண்கள் உலகின் கண்கள், முனைவர் திருமதி சு.சிவகாமிசுந்தரம் ப.31)

## இடைக்காலப் பெண்கள் கல்வி

இடைக்காலத்தில் பெண்கல்வி மறுக்கப்பட்டது. “அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?” என்ற வினா எழுப்பப்பட்டு பெண்களுக்கு முட்டுக்கட்டை இடப்பட்டது. பெண்களைச் சமைப்பதற்கும், துவைப்பதற்கும், வேலை செய்வதற்கும் பயன்படுத்தினர். இக்கால கட்டத்தில் மாயூரம் வேதநாயகம், பாரதியார், திரு.வி.க, பெரியார், வேதநாயகம் பிள்ளை போன்றோர் பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டனர்.

## பெண்களின் கல்வித்தகுதியும், சமுதாயத்தின் மறுமலர்ச்சியும்

மேண்மையான கல்வி பெண்களுக்குக் கிடைப்பதற்கு மட்டுமின்றி அவர்களை அடிமைப்படுத்துவதற்கு எதிராகவும், “பெண்களின் சக்தி” சமுதாயத்தில் அமைந்திடல் வேண்டும். மிகுதியான அளவில் “அறிவுப் புரட்சி” பெண்களிடம் கண்டால், அரசினுடைய முயற்சிகளும், படித்தவர்களின் முயற்சியும் வளர்ச்சிப் பாதையில் வழிகாட்டும். கடந்த 30 ஆண்டுகளாக நாட்டில் கல்வியில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

## முடிவுரை

பொதுவாக, உலகியல் கல்வி, ஆன்மிக அறிவுக்கான தேடல், போர்க்கலை ஆகிய எல்லாப் பிரிவுகளுமே பெண்ணுக்கு உகந்தல்லாததாக மறுக்கப்பட்டிருக்கவில்லை. அவளுக்குக் கல்வி-கேள்வி வாழ்க்கை இன்பம் என்ற உரிமைகள் பூரணமாக இருந்ததென்றே கூறலாம்.

கல்வியும் நல்லறிவும் ஆடல் பாடற் கலைகளுடனும் இசைந்திருந்தது. ஆடற்கலையும், பாடற்கலையும் ஒரு பெண்ணின் இயல்பான குடும்ப வாழ்க்கைக்கு இசையாத நிலையில் ‘விலைமகள்’என்ற வருக்கத்தாரைத் தோற்றுவித்து அவர்களுக்கு மட்டுமே உரிய கலைகளாக ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. மாலை நேரங்களில், ஒத்த இளைஞர்களுடன் உற்சாகமூட்டும் விநோதக் களியாட்டம் கள் என்ற வகையில் மாந்தர் கூடும் பொழுதுபோக்குக் கூடங்கள் சமானங்கள் (சமாஜங்கள்) பெண்கள் பழகுவதற்கு உரிய இடங்களாக இருந்தன. இவை அனைத்துமே, ஏழு வயசில் அவள் அறிவுக் கண்ணை பூவாலும், பொன்னாலும் பட்டாலும் குருடாக்கித் திருமண பந்தத்தில் இறுக்கிவிட்ட நிலையில், பயனற்றுப் போயின.

## References

R. Deivanai, Kalyanasundari, Jayabhoopathy, Women Development (Women empowerments), Thamarai publication, Chennai.

S. Sivagamasundari, Women are the eyes of world, publication (p) Ltd, Chennai

Rajamkrishnan, Women through the Ages, Thagam publications, Chennai.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License